ISSN:2582-9599



# பண்டைய இலக்கியங்களில் திருவிழாக்கள்

பெ. கிருஷ்ணமூர்த்தி[1] & மா . வெங்கடேசன்[2]
[1] முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி – (ஆடவர்)
கிருஷ்ணகிரி – 635 001. tamilkicna777@gmail.com

14

**ஆய்வுச்சுருக்கம்**

போச்சம்பள்ளி வட்டாரததில் திருக்கோயில்களையும் மக்களையும் எக்காலத்தும் பிணைத்து வைக்கும் சங்கிலித் தொடர் போன்று திருவிழாக்கள் அமைந்துள்ளன. ஆண்டு முழுவதும் திருவிழாக்களை அமைத்துக் கொண்டாடினர். சிவபெருமானுக்குத் திருவாதிரை விழா, முருகனுக்குப் பங்குனி உத்திரப் பெருவிழா திருமாலுக்குத் திருவோணத் திருவிழா என்றெல்லாம் கொண்டாடி வருகின்றனர்.

கடவுள் மீது கொண்டுள்ள பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்கும், கோயில்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை ஈடுபாட்டை மிகுதிபடுத்திக் கொள்வதற்கும் தொடர்ந்து பேணிக்கொள்வதற்கும் நம் முன்னோர்கள் திருவிழாக்களை நடத்தியதை ஆய்வின் மூலம் அறியலாகிறது.

**முன்னுரை**

திருவிழாக்கள் பண்பாட்டு உறவினை வளர்க்கவும், ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. நாட்டுப்புற விழாக்களின் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடும், பழக்க வழக்கங்களும், நாகரீகமும் வெளிப்படுகின்றன.

'விழா' என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்' என்கிறார் இரவிந்திரநாத்தாகூர். மனித சமுதாயம் பல்வேறு, காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களே. இவ்விழாக்கள் மூலம் கலையும், கலை அனுபவமும் மேலோங்கி வளர்கின்றன.திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் தொடர்பு கொண்டுள்ளன.

**கிராமப்புற திருவிழாக்கள்**

ஒரு கிராமத்தைச் சேர்ந்த பல சாதி மக்களும், பல குடும்பங்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடி வாழும் விழாக்களை சமுதாய விழாக்கள் எனலாம். ஓர் ஊரில் வாழும் அனைத்து மக்களும் ஒன்றுகூடி, விழாக்களில் பங்கு கொண்டு தங்கள் உறவினர்களையும் வரவழை;தது அவர்களோடும், ஊர் மக்களோடும் கூடி மகிழும் விழாவே சமுதாய விழாவாகும். இது பெரும்பாலும் ஒரு ஊரைச் சேர்ந்தவர்கள் சேர்ந்து கொண்டாடுவதும், தொடர்புடைய பல ஊர் மக்கள் சேர்ந்து கொண்டாடுவதும் உண்டு. இவ்வாறு கொண்டாடப்படும் விழாக்கள் சமுதாய விழாக்கள் எனலாம். இவை பெரும்பாலும் கோயில் திருவிழாக்களாகவே அமையும்.

வருடம் முழுவதும் உழைத்து வாழும் கிராம மக்கள் விழாக்களின்போது ஓய்வு எடுத்துக் கொள்வதோடு தங்களை மகிழ்ச்சியோடு இருக்கவும் மாற்றிக் கொள்கின்றனர். வருடத்தின் சில தினங்களில் உழைப்பை நிறுத்திவிட்டு உற்றார் உறவினர் ஊர் பொதுமக்களோடு இணைந்து மகிழ்ச்சி அடைகின்றனர்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அவரவர் உறவினரோடு இணைந்து நடத்தும் சிறப்பு நிகழ்ச்சிகளை குடும்ப விழாக்கள் எனலாம். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சிகள் யாவும் குடும்ப விழாக்களே. காதணி விழா, பூப்புனித விழா, திருமண விழா, வளைகாப்பபு விழா முதலான விழாக்கள் குடும்ப விழாக்களில் அடங்கும். இக்குடும்ப விழாக்களில் ஒரு குடும்த்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் உறவினர்களை வரவழைத்து விருந்து வைத்து ஒருவருக்கொருவர் நலம் விசாரித்து கூடி மகிழும் தன்மையைக் காணலாம்.

**அகநானூற்றில் கார்த்திகை தீபத் திருவிழா**

பழங்காலத் தமிழ் மக்கள் கார்த்திகைத் திருநாளை சிறப்பாகக் கொண்டாடினர். கார்த்திகை நாளிலே வீதியிலே விளக்கேற்றி வைப்பார்கள். மலர் மாலைகளைத் தொங்க விடுவார்கள். பலரும் கூடிப் பார்த்து மகிழ்ச்சி அடைவர். 'சிறிய முயலாகிய களங்கம் தன் மார்பிலே விளங்கும்படி முழுமதி தோன்றும். உரோகிணி சந்திரனுடன் சேர்ந்திருக்கும் இத்தகைய கார்த்திகை நாள் இரவில் வீதியிலே விளக்கேற்றி வைப்பர். மலர் மாலைகளைத் தொங்க விடுவர். பழமையான சிறந்த ஊர்களிலே மக்கள் பலரும் கூடி வாழாக் கொண்டாடுவர்' என்பதனை,

"குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மறுகு விளக்கு உறுத்து; மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவு" (அகம். 141)

எனவரும் அகநானூற்றுப் பாடலால் அறியலாம்.

அகநானூற்றுப் பாடலொன்று காட்டில் இலவம் பூக்கள் வரிசையாக மலர்ந்து கிடப்பது பெண்கள் ஏற்றி வைத்த நெடிய விளக்கு ஒளிபோல் இருந்தது (அகம்.11) எனக் கூறும். நற்றிணைப் பாடல் (202) கோங்க மரங்களின் ஒழுங்கு அறுமீன் பொருந்திய நாளில் வரிசையாக வைக்கப்பட்ட விளக்குகளின் ஒழுங்குபோல் இருந்தது எனக் குறிப்பிடும்.

திருவண்ணாமலை திருத்தலத்தில், திருக்கார்த்திகை நன்னாளில், மலை உச்சயில் பேரொளிச் சுடர் ஏற்றப்படுகிறது. இது நாடு தழுவிய திருவிழா ஆகும். சங்க காலத்தில் சேர நாட்டில், திருக் கார்த்திகை தினத்;தில் மலை உச்சியில் பேரொளிச் சுடர் ஏற்றப்பட்டது. இந்தச் செய்தியை பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர மன்னராகிய புலவர், அகநானூற்றில் குறிப்பிடுகின்றார்.

கார்த்திகை மாதத்தில் முழு நிலா நாளில் கார்த்திகைத் திருவிழா போச்சம்பள்ளி பகுதி எங்கும் கொண்டாடப்படுகிறது. வீடுகள் தோறும் அகல விளக்கேற்ற அலங்கரிப்பார்கள். கோளத் தட்டில் செய்யப்பட்ட சொக்கட்டானை கிராம மக்கள் எரித்து மகிழ்வார்கள். வீட்டு வாசலிலும்,

தோட்டத்திலும், மாட்டுத் தொழுவத்திலும் விளக்கேற்றி வைப்பார்கள். சிறிய மண் அகல் விளக்கில் திரியிட்டு ஏற்றுவார்கள். போச்சம்பள்ளி வட்டாரமே விழாக்கோலம் பூண்டிருக்கும் என்கிறார் சென்றாயன்மலை எனும் ஊரைச் சேர்ந்த மாடசாமி என்பவர்.

**தீபாவளி**

தீபாவளி எனும் பண்டிகை இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது. இதனை 'ஒளி விழா் என்றும்; விளக்கணி விழா' என்றும் குறிப்பிடுவர். கோயில்களுக்குச் சென்று தீபம் ஏற்றி வைத்து நீராடி, புத்தாடை புனைந்து வழிபட்டு மகிழ்வர். பட்டாசு வெடித்தும், விருந்து சமைத்து உண்டும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவர்.

போச்சம்பள்ளி வட்டாரத்தில் உள்ள இருமத்தூர் ஆற்றிற்குச் சென்று நீராடி அங்குள்ள சிவன் கோயிலில் கடவுளை வழிபட்டு பின் புலால் உணவு சமைத்து தீபாவளியை கொண்டாடுவர். விடியற் காலையிலேயே நீராடுவதால் கங்கையில் நீராடிய புண்ணிய பலனை அடைவதாக பனங்காட்டுர் என்ற ஊரைச் சேர்ந்த முனியப்பன் என்பவர் குறிப்பிட்டார். மேலும் அரசம்பட்டிஇ ஆகிய ஊர்களில் உள்ள தென்பென்னை ஆறுகளிலும் நீராடி மகிழ்வர்.

பட்டினப்பாலையில் கொடியேற்றத் திருவிழா

கோயில்களில் திருவிழாக்கள் தொடங்குகின்றன. அவ்வாறு தொடங்குவதற்கு நன்னிமித்தமாகக் கொடியேற்றம் நடைபெறுகிறது. கோயில்களில் திருவிழா தொடங்கும் சமயத்தில் கொடியேற்றம் நடைபெற்றதை,

"மலர் அணி வாயில் பலர்தொழு கொடியும்" (பட்டிணப். அ.159)

என்ற பட்டினப்பாலை பாடலடி குறிக்கிறது. அதாவது, 'மலர்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட திருக்கோயிலின் உள் வாயிலில் அமைந்துள்ள கொடி மரத்தில் அடியார்கள் பலரும் திரண்டு நின்று கை கூப்பித் தொழுது வணங்கும்படியாக ஏற்றப்பட்ட கொடி; என்பது இதன் பொருளாகும்.

போச்சம்பள்ளி வட்டாரத்திலும் கோயில்களில் விழா தொடங்கு முன்னர் மூங்கில் எனும் மரத்தின் முனையில் மஞ்சள் கொடியை கட்டி கோயிலின் வாசலில் நடுகின்றனர். இதனை பூசாரியே முழுப் பொறுப்பேற்று செய்கிறார். சில கோயில்களில் கொம்பின் முனையில் மஞ்சள் பூசப்பட்ட துணியில் சில்லரைக் காசுகளை முடி;தது கட்டி அக்கொம்பினை கோயிலின் முன் பகுதியில் நடுவதும் உண்டு (தகவலாளர். குமரன்)

மதுரைக்காஞ்சியில் தேர்த் திருவிழா

தேர் செய்து, தேரில் கடவுளர் திருமேனியை எழுந்தருளப் பண்ணினார்கள். எல்லாரும் ஒன்று கூடி, ஆரவாரத்துடன் இரத வீதிகளில் வடம் பிடித்துத் தேர் இழுத்துத் திருவிழா கொண்டாடினர்.

'தேர் செல்லுகின்ற தெரு' எனச் சுட்டப்படுவதை,"தேர் வழங்கு தெரு"

(மதுரைக்காஞ்சி, அ. 648)

எனும் பாடலடி உணர்த்தும்.

போச்சம்பள்ளி வட்டாரத்தில் மூன்று நான்கு ஊர்களுக்கு ஒரு தேர் என்ற நிலையில் கோயில் வளாகத்தில் தேர் நிறுத்தப்பட்டிருந்ததை கள ஆய்வில் காண முடிந்தது. குறிப்பாக முருகன்,

எல்லையம்மன், மாரியம்மன் ஆகிய கோயில்களில் தேர் அமைந்திருந்தது. தெய்வங்களின் தன்மைகளுக்கேற்ப குறிப்பிட்ட மாதங்களில் நடைபெறும் திருவிழாக்களின் போது தேர் அலங்கரிக்கப்பட்டு கடவுள் காட்சித் தருகிறார். முருகனுக்கு தை மாதமும், மாரியம்மனுக்கு ஆடி மாதமும் எடுக்கும் விழாக்களின் போது தேர் பிரமாண்டமாக அலங்கரிக்கப்பட்டு வீதி உலா வரும் பக்தர்கள் தேரில் வீற்றிருக்கும் கடவுளை பயபக்தியோடு வணங்குவர் (தகவலாளர். சக்கரை)

மதுரைக்காஞ்சியில் திருவோணத் திருவிழா

திருமாலின் நட்சத்திரம் 'திருவோணம் தமிழ்நாட்டில் திருமாலை வழிபாடு செய்யும் திருவிழாவாக ஓணம் திருநாளைக் கொண்டாடினார்கள். அவுணர்களுடன் போர் செய்து வென்ற, அழகிய மாலையினை அணிந்துள்ள திருமாலை முதன்மையாக வைத்துக் கொண்டாடப்படுகின்ற திருவோணத் திருவிழா என்பதை,

“கணம்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேல ஓண நன்னாள்” (மதுரைக்காஞ்சி. 590)

என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

போச்சம்பள்ளி வட்டாரத்தில் தெலுங்கு என்ற மொழிபேசும் மக்கள் ஓணம் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். மேலும் நாயீடு சாதியினரும் இவ்விழாவை சிறப்பிக்கின்றனர்.

நெடுநல்வாடையில் கால்கோள் விழா

நல்ல நாள், நல்ல நேரம், நல் நாழிகை, நல் ஓரை ஆகிய இவற்றைக் கணித்துத்தான் இன்றைக்கும் கட்டடம் கட்டுவதற்குக் கால்கோள் விழாத் துவங்குகிறார்கள். ஒவ்வொரு திசைக்கும் உரிய தெய்வம் தங்களின் புதிய கட்டடத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்னும் மரபு வழி நம்பிக்கை மக்களிடம் இருந்து வருகிறது.'கட்டடம் கட்டுவதற்குக் கால்கோள் விழாத் தொடங்கும் நேரத்தில் திசைகளில் உறைகின்ற அந்த அந்தத் தெய்வங்களை வழிபட்டு எனும் பொருள்படும் படி,

“தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி” (நெடுநல். அ. 77)

எனும் நெடுநல்வாடை பாடல் குறிப்பிடுகிறது.

போச்சம்பள்ளி வட்டாரத்திலும் நல்ல நாள், நேரம் பார்த்து கட்டடம் கட்ட பூசை செய்யும் வழக்கம் உள்ளது. இதற்கு பிராமணர்களே நாள் குறித்தலையும், அடித்தளமிடுதலையும் செய்கின்றனர்.

**பங்குனி உத்திரம்**

பங்குனி மாதத்pல் வரும் முழுநிலா நாளன்று தமிழகக் கோயில்களில் விழா எடுக்கப்பகிறது. சிறப்பாக முருகனுக்கு இவ்விழா எடுக்கப்படுகிறது. போச்சம்பள்ளி வட்டாரத்தில் உள்ள ஜம்புகுட்டப்பட்டி எனும் ஊரில் வீற்றிருக்கும் கருமலை நடுபழநியாண்டவருக்கு சிறப்பாக இவ்விழா எடுக்கப்படுகிறது. இவ்விழா நாளன்று காவடிகள் எடுத்து ஆடி வருவதும், நெல் காணிக்கை அளிப்பதும் உண்டு. ஒவ்வொரு ஊர் மக்களும் வரிசையாக நின்று 'இந்த ஊர் காவடி இது' என்று குறி;பிட்டுச் சொல்லும்படியாக காவடிகள் பாடலோடும், ஆலோடும் கொண்டு வருவார்கள்.

மதுரைக்காஞ்சியில் நீராட்டு விழா

பௌர்ணமிக்கு ஏழாம் நாளில் அதாவது வளர்பிறை எட்டாம் நாளில் ஒரு விழா நடைபெறும்.

அவ்விழாவில் மக்கள் தங்களின் பாவங்களைப் போக்குவதற்காக நீராடுவார்கள் எனும் செய்தி மதுரைக்காஞ்சியலே சுட்டப்படுகிறது.

பெண்கள் மார்கழியில் நோன்பிருந்து தை மாதம் முதலில் நீராடுவர். இதற்கு தைந் நீராடல் என்று பெயர். ;தை மாதத்தின் முதல் நாளிலே குளிர்ந்த நீர் நிறைந்த குளத்திலே, நோன்புடன் நீராடும் பெரிய தோள்களையுடைய இளம் பெண்' எனும் பொருளில்,

“தை இத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள்” (நற்.80)

என்ற நற்றிணைப் பாடல் சுட்டுகிறது.

மேலும் தைந் நீராடும் வழக்கத்தை கலித்தொகையும்,

“தையின் நீராடிய தவந்தலைப் படுவாயோ” (கலித். 59)

எனக் குறிப்பிடுகின்றது.

போச்சம்பள்ளிப் பகுதியில் அமைந்துள்ள பல்வேறு நீர் நிலைகளுக்கு இம்மக்கள் சென்று நீராடிவிட்டு வருவர். குறிப்பாக கிருஷ்ணகிரி முசுP டேம் சென்று புனித நீராடுவதும் உண்டு.

மயானக் கொள்ளை திருவிழா

வருடா வருடம் மகா சிவராத்திரிக்கு முன் தினம் மயானக் கொள்ளை நடைபெறும். இதுவும் திருவிழாவாகும். இது அந்தந்த ஊரிலுள்ள அங்காளம்மன் தெய்வத்திற்குச் செய்யும் விழாவாகும். தெய்வ உருவத்தை சடுகாட்டிற்குக் கொண்டு செல்வார்கள். அங்கு கிராம மக்கள் தங்கள் தோட்டத்திலுள்ள புளியங்காய், கத்தரிக்காய் முதலியவற்றையும், தானியங்களையும் கொண்டு வந்து இரைப்பார்கள். அவ்வாறு செய்தால் விளைச்சல் நன்றாக இருக்கும் என்று நம்புகின்றார்கள் இங்குச் செல்லும் குழந்தையற்றவர்களுக்கு குழந்தைப்பேறு கிடைக்கும் என்றும் நம்புகிறார்கள். கீழே இறைந்து கிடக்கும் பொருட்கள் புனிதமாகக் கருதப்படுகிறது.

**தொகுப்புரை**

கிராமப்புற திருவிழாக்கள், அகநானூற்றில் கார்த்திகை தீபத் திருவிழா, பட்டினப்பாலையில் கொடியேற்றத் திருவிழா, மதுரைக்;காஞ்சியில் தேர்த் திருவிழா, மதுரைக்காஞ்சியில் திருவோணத் திருவிழா, மதுரைக்காஞ்சியில் நீராட்டு விழா, மதுரைக்காஞ்சியில் நீராட்டு விழா, பங்குனி உத்திரம், மயானக் கொள்ளை திருவிழா, காளியம்மன், போச்சம்பள்ளி வட்டார தெய்வ வழிபாட்டில் பண்பாட்டுக் கூறுகள் போச்சம்பள்ளி வட்டாரத்தில் பண்பாட்டுக் கூறுகளை காணலாம்.

**பார்வை நூலகள்**

1 .ச. வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியம் அகநானூறு
2. ச. வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியம் நெடுநல்வாடை
3. ச. வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியம் மதுரைக்காஞ்சி
4. ச. வையாபுரிப்பிள்ளை சங்க இலக்கியம் பட்டினப்பாலை
5. களஆய்வு தகவாளர் கண்ணன் 40 வயது போச்சம்பள்ளி